இவ்வாறு மறைமுகமாக உணர்த்தப்பட்ட மெய்ப்பாட்டுக் கூறுகள் இலக்கிய வடிவிலும் எழுத்து வடிவிலும் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே வழக்கத்தில் இருந்து வந்திருக்கின்றது. தொல்காப்பியம் எனும் இப்பழந்தமிழ் நூல், மாந்தர் இன மனத்தில் தோன்றும் உணர்ச்சிகளை மெய்ப்பாட்டுக் கோட்பாடுகளின் வழி கண்டறிந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

விளக்கியுள்ளது (பாலச்சந்திரன், 2012). ஏறத்தாழ 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்தது தொல்காப்பியம். இதன் காலம் கி.மு.3ஆம் நூற்றாண்டுக்கும் கி.மு.5ஆம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாகும் என்று கணிக்கப்படுகிறது. புதினம் பற்றிய செய்திகளும் தொல்காப்பியத்தில் உள்ளன. தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் உள்ள ஒன்பது இயல்களில் ஆறாவதாக இயலாக அமைந்திருப்பது மெய்ப்பாட்டியல். இந்த இயலானது, மாந்தரின் மன உணர்வைக் குறிப்பதாகத் தொல்காப்பியம் கூறுகின்றது. மெய் என்பது உடம்பு, பாடுபடுதல் என்பது தோன்றுதல் எனப் பொருள்படும். அதாவது உள்ளத்துள் தோன்றும் உணர்ச்சிகள் மற்றும் அதனால் உடலில் ஏற்படும் மாற்றங்கள் பிறருக்குப் புலனாகுமாறு புற உறுப்புகளில் தோன்றுதலே மெய்ப்பாடாகும். தொல்காப்பியர், ஒருவரின் மெய் வேறுபாடறிந்து மற்றவர் ஒழுக வேண்டிய திறப்பாடு பற்றியே மெய்ப்பாட்டியலில் அமைத்துள்ளார். தொல்காப்பியர், தம் மெய்ப்பாட்டியலில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அகப்பொருளுக்கும், புறப்பொருளுக்கும் உரிய உணர்ச்சிகளையும் விளக்கியுள்ளார். ஒருவர் உள்ளத்தில் எழும் உணர்ச்சிகள், மற்றவர் கண்டும், கேட்டும் அறியப் புறவயக் குறியால் புலப்படுபவையே "மெய்ப்பாடு" எனப்படும். தொல்காப்பியர் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், வெகுளி, பெருமிதம், உவகை என எண்வகை மெய்ப்பாடுகளைக் கூறியுள்ளார் (இலக்குவனார், 2009).

மெய்ப்பாட்டியல் கூறுகள், தொல்காப்பியர் காலந்தொட்டும் அதற்கு முன்பாகவும் எண்ணற்ற தமிழ் நூல்களில் பயன்பாட்டில் கலந்திருக்க வேண்டும் என தொல்காப்பியரே சான்று கூறுகின்றார். ஏறத்தாழ 250க்கும் மேற்பட்ட இடங்களில் மற்றவர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்று பொருள் தருகிற "என்ப, என்மனார் புலவர், நூலறிப்புலவர், உணர்ந்தோர், உணருமோர், சிறந்திசினோர், புலமையோர், தெளியுமோர், அறிந்திசினோர், என்றிசினோர், இயல்புணர்ந்தோர், குறியறிந்தோர், உரைத்தனர், வாய் மொழிப்புலவர், யாப்பறி புலவர், நூல்நவில் புலவர், தொன்னெறிப் புலவர், தெரிந்தனர், அறைந்தனர், புலனுணர்ந்தோர், நெறிப்படுத்தினர், யாத்தனர், வரையார்" என்பன போன்ற வாய்ப்பாடுகளைக் கொண்டு இந்த மொழிக்கட்டமைப்பைத் தாம் ஆக்கவில்லை என்றும் இந்த விதியைத் தாம் உருவாக்கவில்லை இதற்கு முன்பே புலவர்கள் பலர் கூறியிருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். தமக்கு முன், பல நூல்களில் பலர் சொன்ன கருத்துக்களைத் தொல்காப்பியர், தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார் என்பது தெரிகின்றது. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரத்தில் பனம்பாரனார்,

"அழக்குஞ் செய்யுளும் ஆயிரு முதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமி ழியற்கை சிவணிய நிலத்தொடு
முந்துநூல் கண்டு முறைப்பட வெண்ணிப்
புலந்தொகுத் தோனே"

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


என்று தொல்காப்பியர் நூல் ஆக்கிய முறையைப் பற்றிக் கூறினார். பொருளதிகாரத்தில் மாந்தர்க்குரிய உணர்வுகளைக் குறித்து எட்டு வகையான மெய்ப்பாடு கோட்பாடுகளை விளக்கியுள்ளார் தொல்காப்பியர்.

நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை யென்று
அப்பா லெட்டே மெய்ப்பா டென்ப. (தொல்:1193)

இவ்வாறு மாந்தர் இன வாழ்வில் இரண்டற கலந்துவிட்ட மெய்ப்பாட்டுக் கூறுகள் எழுத்துலகிலும் ஏனைய துறையிலும் பரிணமிக்கத் தொடங்கியது. வேறு துறையைக் காட்டிலும் எழுத்துலகில் இம்மெய்ப்பாட்டியல் இடம்பெற்றுள்ளதை சிறுகதை, நாவல், தொடர்கதை போன்ற இலக்கிய வடிவங்கள் வழி கண்டு கொள்ள முடிகின்றது. மெய்ப்பாடுகளும் அதன் உட்பிரிவான நிலைக்களன்களும் மனித வாழ்வில் இயல்பாக நடைபெறுவதைக் காண இயலும். அன்றாட வாழ்வில் ஒவ்வொரு மெய்ப்பாடும் வெளிப்படுவதற்கான காரணங்களை விளக்குவதே நிலைக்களன்களாகும். மேலும் முதன்மை மெய்ப்பாடுகளைத் தவிர்த்துத் துணைமை மெய்ப்பாடுகளையும் தொல்காப்பியர் ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தெளிவாகவும் ஆழமாகவும் கூறியுள்ளார்.

அன்றாட வாழ்வில் பல தரப்பட்ட மாந்தர்களை வெவ்வேறு கோணத்தில் படம் பிடித்துக்காட்டும் மெய்ப்பாட்டியல் கூறுகள் எழுத்தாளர் சுஜாதா நாவல்களிலும் அதிகமாக இடம் பெற்றுள்ளன. தமிழகத்தின் குறிப்பிடத்தக்க எழுத்தாளர்களில் சுஜாதாவும் ஒருவராவார். மே 3, 1935ஆம் ஆண்டு சென்னையில் பிறந்த சுஜாதா என்கிற ரங்கராஜன் ஒரு பொறியியல் பட்டதாரி. அவருடைய படைப்புகள்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கற்பனையாலும் நடையாலும் தனித்து நின்றதாலேயே பல வாசகர்களைத் தன்பால் கவர்ந்தன.

இவருடைய முதல் கதை 1953இல் சிவாஜி என்ற பத்திரிக்கையில் வெளிவந்தது. இவர் சிறுகதைகள், புதினங்கள், நாடகங்கள், அறிவியல் நூல்கள், கவிதைகள், கட்டுரைகள், திரைப்படக் கதை வசனங்கள், தொலைக்காட்சி நாடகங்கள், நாவல்கள் போன்றவற்றில் முத்திரைப் படைத்தவர். நாவல் எழுத்துலகில் பல எழுத்தாளர்கள் தங்கள் படைப்பினை உலகுக்குக் கொடுத்தவர்களில் நாவலாசிரியர் சுஜாதாவும் ஒருவராவார். இவர் எழுதிய 53 புதினங்களும் ஆறு குறும்புதினங்களும் திகில் நிறைந்த, துப்பறிவு சாயலில் அமைந்திருப்பதாலும் அதிக மெய்ப்பாட்டியல் கூறுகள் கதைமாந்தர்கள் வழி படைக்கப்பட்டுள்ளன. இவருடைய ஏழு கதைகள் திரைப்படமாக்கப்பட்டன. இவர் திரைப்படங்களில் 1992 முதல் 2006 வரை கதையாசிரியராகப் பணியாற்றியுள்ளார். தன் 72வது அகவையில் பிப்ரவரி 27, 2008-இல் இறைவனடி சேர்ந்தார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.3 ஆய்வுச் சிக்கல்

அறிவியலின் ஒரு பிரிவே உளத்தியல் ஆகும். உளத்தியல் மாந்தரின் அகப் பண்புகளையும், புறப் பண்புகளையும் ஆராய்கிறது. உளத்தியல் ஆய்வினைத் தான் தொல்காப்பியம் அகஒழுக்கம், புறஒழுக்கம் என மெய்ப்பாட்டு இயலில் தொகுத்துச் சொல்கிறது. பேச்சு மொழி தோற்றத்திற்கு முன்பே மாந்தன் தன் உள்ளத்து உணர்ச்சிகளைத் தன் உடல் அசைவுகளால் வெளிப்படுத்தினான். உள்ளத்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உணர்ச்சிகளின் வெளிப்பாடாகத் தோன்றும் புறக்குறிகள் மெய்ப்பாடுகள் எனப்படும் (முரளி, 2015). மாந்தர் இனத்தை தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது அறிவும், உணர்ச்சியும்தான். அறிவும் செயலும் ஒருசேர செயல் படும் போது உலகம் தோன்றிய நாளிலிருந்து, உலகம் அழியும் வரை இருப்பவை அறிவும், உணர்ச்சியும் தான். உணர்ச்சியை அமைதிப்படுத்துவது அறிவு என்கிறார் திருவள்ளுவர்.

சென்ற இடத்தால் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு. (குறள்-422)

மன உணர்வின் வெளிப்பாடுகளே மெய்ப்பாடுகள். அவை மாந்தர் அனைவருக்கும் பொருந்தும் உணர்ச்சிகள் ஆகும். மாந்தர் மகிழ்ச்சி ஏற்படும் போது சிரிக்கின்றனர். மறுகணமே துன்பம் எதிர்நோக்கும் போது அழுகின்றனர். சில செயல்களை நினைக்கும் போது அருவருப்பு அடைகின்றனர். மாந்தர் நிலவில் கால் பதித்த போது வியந்த மனிதன் பாம்புகளைக் கண்டால் அஞ்சுகின்றான். பிறர் தவறு செய்யும் போது கோபம் கொள்கின்றனர் (ஜெயஸ்ரீ, 2010). இவ்வாறு மனிதத்திற்குரிய மெய்ப்பாடுகள் பற்றி பேசுவது மெய்ப்பாட்டியல் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

உலக இலக்கியங்களுள் பழமை வாய்ந்த இலக்கண நூலாகவும் கிடைக்கப்பெற்ற தமிழ் மொழி நூல்களில் மிகப் பழமையானதுமான தொல்காப்பியம் எண்வகை மெய்ப்பாட்டியலை நிலைக்களன்களோடு விவரித்துள்ளது (இலக்குவனார், 2009). மக்களின் அகப்புறச் செயல்பாடுகளையும் அவர்தம் வாழ்க்கைச் சூழலையும் கொண்ட ஒரு படைப்பிலக்கியமே தொல்காப்பியம். வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து அறம் பொருள் இன்பம் அடைந்து, பண்டைத் தமிழர்கள் தூய நல்லறத்தைத் துணையாகப்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பெற்று வாழ்ந்த முறையையும், வாழ்வின்பம் துய்த்ததற்குச் சிறப்புறு கருவியாகத் துணைபுரிந்த தமிழ்மொழியின் இயல்பையும் எடுத்துக்காட்டுவது தொல்காப்பியம். அதோடு, தமிழர் வாழ்வின் பல்துறை பற்றி அறிவதற்கும் துணைபுரிவது இந்நூலேயாகும் (இலக்குவனார், 2009).

ஏறத்தாழ 5000 ஆண்டுகளுக்கு முன்பே உருவான தொல்காப்பிய இலக்கண இலக்கிய நூலில் எண்வகை மெய்ப்பாடு சங்ககால இலக்கியங்களிலும் புதிய இலக்கியங்களிலும் தொடர்ந்து பயன்பாட்டில் இருந்து வருகின்றது. புதிய இலக்கியங்களான கதை, கட்டுரை, கவிதை, நாவல், நாடகம், முதலியவற்றிலும் திரைப்படத் துறையிலும் கூட தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் கூறுகள் இன்றும் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டில் வெளிவந்த நாவல்கள் பொழுது போக்கிற்காகவும் பல கருத்துகளைச் குமுகாயத்திற்கு எடுத்துரைக்கவும் பயன்பட்டன. நாவல் துறையில் மெய்ப்பாட்டியல் கூறுகள் எவ்வாறு நாவலின் வெற்றிக்கும் வாசிப்போரின் மன உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் கருவியாகவும் அமைந்துள்ளது என்பதை ஆய்வு மேற்கொள்ளும் பொருட்டு ஆய்வாளர் 2005ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரை வெளிவந்த சுஜாதா நாவல்கள் ஐந்தினைத் தேர்வு செய்துள்ளார். இந்நாவல்களில் காணப்படும் கதை மாந்தர்களின் மெய் உணர்வுகள் தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் வழி எடுத்துரைத்துள்ள நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை என்ற எட்டு விதமான மெய்ப்பாட்டு உணர்வுகள் எவ்வாறு புலப்படுத்துகின்றன என்பதை ஆய்வாளர் ஆராயவுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இலக்கியத்தில் மெய்ப்பாடு கூறுகள் மாந்தரின் தொடர்பு மொழியாக பயன்படுத்தப்படுகிறது. எழுத்தாளர்கள் தங்கள் உள்ளுணர்வுகளை, எண்ணங்களை, பட்டறிவுகளைக் குமுகாயத்திற்கு ஏதாவது ஒரு வழியில் எடுத்துரைக்கவே சிறுகதை, கதை, நாவல், பாடல், கவிதை, நாடகம் எனப் பல்வகையான எழுத்துப்படிவங்களைப் படைத்தனர். எழுத்தாளன் தன் உள்ளத்தைக் கவரும் காட்சியிலோ நிகழ்ச்சியிலோ ஆழ்ந்து ஈர்க்கப்பட்டு அவற்றைத் தன் எழுத்துப் படைப்புகளில் உள்ளத்து உணர்ச்சிகளை எழுத்து வடிவில் படைக்கின்றான். அன்பு, காதல், பாசம், நேசம், பகிர்தல், புரிதல் ஆகியனவெல்லாம் விடுத்து, குடும்பங்களில் எழும் சிக்கலால், சீரான உறவு பாழ்பட்டு போவதாய்க் கூட நாவல்கள் படைக்கப்பட்டுள்ளன (மீனா, 2012).

தொல்காப்பிய மெய்ப்பாட்டியல் கூறுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும் போது உணர்வானது பொதுவான ஒன்றாகின்றது. ஒரு தனிமாந்தன் தான் ஒரு தவறான செயலில் ஈடுபடுவதற்கு அவனை உந்தச் செய்வதும் மாந்தன் வாழ்வில் அவன் உள்ளத்து உணர்வுகளே ஆகும். மனிதனின் உள்ளக்கிடங்கில் ஏற்படக்கூடிய உணர்வுகள் பல ஆக்கச் சக்திகளையும் அழிக்கும் சக்திகளையும் எழுப்புகிறது. மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை அவனோடு கூட பயணம் செய்வது கண்ணுக்குப் புலப்படாத ஆனால் நடவடிக்கை வழியாகவோ செய்கை வழியாகவோ வெளிப்படுத்துவது அவனுடைய உணர்வே ஆகும்.

முதல் மெய்ப்பாடான அழுகையை ஒரு குழந்தை பிறக்கும் தருணத்தில் வெளிப்படுத்துகின்றது. அந்திம காலத்தின் போதும் இறப்பின் போதும், அவன் உறவினர்கள் தங்கள் வருத்தத்தையும் பிரிவினையையும் வெளிக்காட்ட அழுகையையே

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பயன்படுத்துகின்றனர். மனிதனின் தொடக்கம் முதல் முடிவு வரை இம்மெய்ப்பாடானது மனித வாழ்வில் தொடர்ந்து வெளிப்பட்டுக் கொண்டே வருகின்றது. ஒவ்வொரு தனிமனிதனும் தனக்குள் எழும் உணர்வுகளைச் சரியான முறையில் கையாளவும் ஆதிக்கம் செலுத்தவும் பழகிக் கொள்ளுதல் வேண்டும். மனிதனுள் எழும் உணர்வுகள், மனித மேம்பாட்டிற்கும் குமுகாய வளர்ச்சிக்கும் முதன்மையான பங்கு வகிக்கின்றன.

இந்நூற்றாண்டிலும் இதற்கு முன்பாகவும் பல நாவல்கள் எழுதப்பட்டுள்ளன. இருப்பினும் பெரும்பான்மையான படைப்புகள், அதிலும் நாவல்கள் எந்த அளவிற்கு முதன்மை மெய்ப்பாட்டிற்கும் துணைமை மெய்ப்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்துப் படைக்கப்பட்டுள்ளன என்பதே ஆய்வுச் சிக்கலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. மேலும், இருபத்தொன்றாம் நூற்றாண்டின் நாவல்களில் மெய்ப்பாட்டுக் கூறுகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதும் ஆய்வுச் சிக்கலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சுஜாதா நாவல்கள் துப்பறிதல், குற்றவியல், குமுக விரோத செயல்கள், பெண்களுக்கு இழைக்கப்படும் அநியாயங்கள் போன்ற கருப்பொருளைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. ஆய்வாளர், நாவல்களின் கருப்பொருளைக் கொண்டு மெய்ப்பாட்டியல் கோட்பாடுகளை ஆராயவுள்ளார். சுஜாதா நாவல்களில் மெய்ப்பாட்டியல் என்று ஆய்வாளர் தேர்ந்தெடுத்துள்ள இத்தலைப்பு இதுவரை எந்த ஆய்வுக்கும் உட்படுத்தபடவில்லை. ஆகவே, நாவல் வாசிப்போரின் மனவுணர்வுகளைத் தொல்காப்பியரின் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டின் கீழ் ஆராயும் பொருட்டு ஆய்வாளர் சுஜாதா நாவல்களை ஆய்வுக்களமாகத் தேர்ந்தெடுத்துள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.4 ஆய்வு நோக்கம்

சுஜாதா நாவல்களில் காணப்படும் எண்வகை மெய்ப்பாட்டினை ஆய்வு செய்யும் வகையில் ஆய்வாளர் சில நோக்கங்களைக் கொண்டுள்ளார். சுஜாதா நாவல்களில் காணப்படும் எண்வகை மெய்ப்பாடுகள் நான்கு நோக்கங்கள் அடிப்படையில் ஆராயப்படவுள்ளன.

i. சுஜாதா நாவல்களில் காணப்படும் மெய்ப்பாடு கூறுகளை அடையாளம் காணுதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ii. சுஜாதா நாவல்களில் வெளிப்படும் மெய்ப்பாட்டு உணர்வுகளுக்கான நிலைக்களன்களை விளக்குதல்.

iii. சுஜாதா நாவல்களில் முதன்மை மெய்ப்பாட்டுகளைத் தவிர்த்து துணைமை மெய்ப்பாட்டுக் கூறுகளைப் பகுத்தாய்தல்.

iv. சுஜாதா நாவல்களில் மெய்ப்பாட்டுக் கூறுகள் வழி உணர்த்தப்படும் படிப்பினையை விளக்குதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## 1.5 ஆய்வு வினா

இந்த ஆய்வு கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை காணும் நோக்கில் அமைந்துள்ளது.

i. சுஜாதா நாவல்களில் காணப்படும் மெய்ப்பாட்டியல் கூறுகள் யாவை?

ii. சுஜாதா நாவல்களில் வெளிப்படும் மெய்ப்பாட்டு உணர்வுகளுக்கான கூறுகள் தொல்காப்பிய நிலைக்களன்களோடு இயைந்துள்ளனவா?

iii. சுஜாதா நாவல்களில் முதன்மை மெய்ப்பாடுகளைத் தவிர்த்து வரும் துணைமை மெய்ப்பாடுகள் யாவை?

iv. சுஜாதா நாவல்களில் எண்வகை மெய்ப்பாட்டுக் கூறுகள் வழி உணர்த்தப்படும் படிப்பினைகள் யாவை?

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.6 ஆய்வு நன்மைகள்

தொல்காப்பியரின் சிறப்பு மிக்க இம்மெய்ப்பாட்டியலை ஒட்டிய இந்த ஆய்வு நாவலாசிரியர் சுஜாதா நாவல்களில் மெய்ப்பாட்டியல் எனும் தலைப்பில் ஆராயப்படுகிறது. இந்த ஆய்வு தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அமைந்துள்ள மெய்ப்பாட்டியல் கோட்பாடு எவ்வகையில் தற்காலத் தமிழ் இலக்கியமான நாவல்களில் வெளிப்படுகின்றது என்பதைக் கண்டறிய துணைபுரியும். மேலும் தமிழ் இலக்கியவாதிகளையும் அவர்களுடைய தமிழ் இலக்கியத்தின் சிறப்புகளையும் அறிந்து கொள்ள இயலும். தொல்காப்பியம் காட்டும் மெய்ப்பாட்டுக் கூறுகளைப் பற்றிய தெளிவு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


பிற ஆய்வாளர்களுக்கு ஏற்படுவதுடன் அதனை வேறு பல கோணங்களில் ஆராயவும் தூண்டுகோலாக அமையும்.

அவ்வகையில் ஆய்வுகளின் வழியே, மாற்றங்களையும் புதிய புதிய உத்திகளையும் வளர்ச்சிகளையும் உருவாக்க முடியும். இவ்வாய்வானது தொடர்ந்து வரும் புதிய எதிர்கால எழுத்துலக ஆய்வாளர்களுக்கும் எழுத்துத்துறை வளர்ச்சிக்குப் பெரும் பயனாகவும் வழிகாட்டியாகவும் விளங்கும். இன்றைய வாசகர்கள், ஆய்வாளர்கள் சுஜாதா நாவல்களைப் பற்றிய ஆய்வு நூல்களை வாசிப்பதன் வழி தொல்காப்பியரையும் தொல்காப்பியத்தைப் பற்றியும் ஆர்வத்தோடு தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டுவர்; தெரிந்து கொள்ள முனைவர். மேலும் நாவலாசிரியரின் ஏனைய படைப்புகளையும் தெரிந்து கொள்ளவும் வாய்ப்புக் கிட்டுகிறது. இவ்வாய்வானது புதிய ஆய்வாளர்கள், 05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi இலக்கியத் துறையில் குறிப்பாக மெய்ப்பாட்டியலை நாவல்களில் புகுத்தும் உத்தியைக் கொடுப்பதோடு புதிய கருத்துகளையும் மெய்ப்பாட்டு கூறுகளை ஆழ்ந்து கற்று, புரிந்து வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் வழி சீர்கேடுகளைத் தவிர்க்கும் வழிகளையும் உணர்ச்சிகளை அடக்கியாளுவதன் வழி பல சிக்கல்களிலிருந்து விடுபடும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தித் தரும்.

மேலும், சுஜாதா நாவல்களில் மெய்ப்பாட்டியலை வெளிப்படுத்தும் நிலைக்களன்களையும் கதை மாந்தர் மூலம் அலசி ஆராய வாய்ப்புக் கிட்டுகின்றது. ஆய்வின் வழி கிடைக்கப்பெறும் அறிவு ஒரு குமுகாயத்தை குறிப்பாகப் பல இன மக்களை அறிந்து கொள்ள உதவும். இந்த ஆய்வின் முடிவுகளை வாசகர்கள் தெரிந்து

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


சீரான இணக்கமான நட்புறவோடு சுற்றுவட்டார குமுகாயத்துடன் இணைந்து செயல்பட உறுதுணையாக அமையும் என ஆய்வாளர் எதிர்பார்க்கிறார்.

தொல்காப்பியத்தில் காட்டப்படும் மெய்ப்பாட்டியல் கோட்பாடுகள் இந்த இருபத்தொன்றாம் நூற்றாண்டு நாவலில் எப்படி வெளிப்படச்செய்வது என சிந்திக்கத் தூண்டும் ஆர்வத்தையும் ஆய்வாளர்களிடையே மலரச் செய்யும். அனைத்துத் தலைமுறையினரும் மெய்ப்பாட்டியல் கோட்பாடுகளையும் அதன் தன்மைகளையும் புரிந்து கொள்ள இவ்வாய்வு பெரிதும் உதவும்.

## 1.7 ஆய்வு எல்லை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சுஜாதா நாவல்களில் வெளிப்படும் மெய்ப்பாட்டியல் கோட்பாடுகளை ஒட்டி இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. தொல்காப்பியர் வகுத்தளித்த மெய்ப்பாட்டியல் கோட்பாட்டைக் கொண்டு இந்நாவல்கள் ஆராயப்பட்டுள்ளன. இவ்வாய்வுக்கு மொத்தம் ஐந்து நாவல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இந்நாவல்கள் 2005 முதல் 2013 வரை வெளியானவையாகும். இந்நாவல்களின் வழி மெய்ப்பாட்டியல் கூறுகள் குமுகாயத்திற்குத் தேவையான பண்பு நலனையும் மெய்ப்பாட்டியல் கூறுகளையும் முறையாகக் கையாளுவதன் வழி சிக்கல்களைத் தவிர்க்கலாம் என்ற செய்தியை அமைதியாகவும் ஆழமாகவும் விளங்கிக் கொள்கின்ற திறனை மிகச் சிறப்பாக வடிவமைத்துள்ளார். இவருடையப் பெரும்பாலான நாவல்கள் இக்கூறுகளைக் கருப்பொருளாகக் கொண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


படைக்கப்பட்டுள்ளன. ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட நாவல்களின் பட்டியல் அட்டவணை 1.1இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 1.1

*ஆய்விற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சுஜாதா நாவல்கள்.*

| **எண்** | **தலைப்பு** | **ஆண்டு** |
|---|---|---|
| 1 | ப்ரியா | 2005 |
| 2 | மீண்டும் ஒரு குற்றம் | 2010 |
| 3 | ஆயிரத்தில் இருவர் | 2010 |
| 4 | வஸந்த்! வஸந்த்! | 2011 |
| 5 | பேசும் பொம்மைகள் | 2013 |

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பல முக்கியக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இந்நாவல்கள் இவ்வாய்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு நாவலிலும் துடிப்பு மிக்க, துணிச்சல் உணர்வு கொண்ட ஆண் பெண் கதை மாந்தர் உலா வருவது நிதர்சனமாக இருக்கின்றது. வேறுபட்ட வாழ்வாதாரச் சூழல்களிலிருந்தும் பொருளாதார வர்க்கத்திலிருந்தும் கதை மாந்தர் குடும்பப் பின்னணியைக் கொண்டவர்களாகவும் அடையாளம் காட்டப்படுகின்றனர். மேலும், வெவ்வேறு காலங்களில் நாவலின் கதை அம்சம் இடம் பெறுவதில் எழுத்தாளர் உறுதியாக இருந்துள்ளார். கதை மாந்தர்கள் பலவிதமான இன்னல்களையும் சிக்கல்களையும் மன, உடல் ரீதியில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


எதிர்கொள்பவர்களாகவும் சித்தரிக்கப்படுகின்றனர். ஆகவே, நாவல்களில் வரும் கதை மாந்தர்களைத் தொல்காப்பியர் வகுத்தளித்துள்ள மெய்ப்பாட்டியல் கோட்பாடு அடிப்படையில் ஆய்வு மேற்கொள்வதும் ஏற்புடைமையாகவும் அமைகின்றது. எண்வகை மெய்ப்பாடுகள் முதன்மை மெய்ப்பாடாகவும், வேறு 32 மெய்ப்பாடுகள் துணைமை மெய்ப்பாடாகவும் ஆய்வு மேற்கொள்வதில் உறுதுணையாகச் செயல்பட்டன.

## 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

இவ்வாய்வின் மூலங்கள் இரு வகைத் தேடுதல்கள் வழி மேற்கொள்ளப்படவுள்ளன. முதன்மைச் சான்றாதாரமாக சுஜாதா நாவல்களும் துணைச் சான்றாதாரமாகப் பிற நாவல்களும் மற்றும் முந்தைய ஆய்வுகளும் பயன்படுத்தபடவுள்ளன. ஆய்வேடு, ஆய்விதழ், ஆய்வுக் கட்டுரைகளோடு பிற நாவல்களும் துணைமைச் சான்றாதாரமாக உட்படுத்தப்பட்டுள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.1 முதன்மைச் சான்றாதாரம்

முதன்மைச் சான்றாதாரமாக சுஜாதா எழுதிய நாவல்களும், தொல்காப்பியர் தொகுத்தளித்த தொல்காப்பியமும் அமைகின்றன. இவ்வாய்வின் முதன்மை நிலை சான்றாதாரங்கள் 2005 முதல் 2013 வரை வெளிவந்த சுஜாதா நாவல்கள் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.8.2 துணைமைச் சான்றாதாரம்

பிற இலக்கியப் புத்தகங்கள், திறனாய்வுப் புத்தகங்கள், முந்தைய ஆய்வுகள், ஆய்வேடுகள், இதழ்கள் போன்றவை ஆய்வுக்கு வழிகாட்டியாகக் கொள்ள துணைச் சான்றாதாரங்களாக உட்படுத்தப்படவுள்ளன. மெய்ப்பாட்டுச் சான்றுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முந்தைய ஆய்வு ஏடுகளும், குறிப்புகளும் இந்த ஆய்வுக்குப் பயன்படுத்தப்படவுள்ளன.

## 1.9 கலைச் சொல் விளக்கம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கலைச்சொற்கள் என்பது ஓர் ஆய்வின் சூழலில் காணப்படும் பொருண்மை விளக்கவும் பின்னணியை அளவிடவும் மட்டுமே. இவ்விளக்கம் ஆய்வாளர் கலைச்சொற்களுக்கும் ஆய்வு உள்ளடக்கத்தினை முறையாகப் புரிந்து கொள்ளவும் வழிகோலும். இவ்வாய்வின் தலைப்பின் அடிப்படையில், ஆய்வாளர் இரு சொல்லாட்சிகளைப் பொருண்மை அடிப்படையிலும் கருத்து வரையறை அடிப்படையிலும் விளக்கியுள்ளார்: ஒன்று மெய்ப்பாட்டியல்; மற்றொன்று நாவல் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.1 நாவல்

தமிழ் உரைநடை படைப்பிலக்கியத்தில் முதலில் தோன்றியது நாவல் தான். இதனைக் கூறியவர் இலக்கியத் திறனாய்வாளர் இரா. தண்டாயுதம். நாவல் எனப்படுவது தொடர்ச்சியான உரைநடையில் எழுதப்பட்ட நீண்ட கதையாகும். "நோவேலா" என்ற இத்தாலிய மொழிச் சொல் வாயிலாக நாவல் என்ற சொல் இம்மாதிரியான இலக்கியத்திற்கு இடப்பட்டது. நாவல் என்பதற்குப் புதுமை என்றும் பொருள்படும். நாவல் என்றால் என்ன என்பதை அதன் உள்ளடக்கம் சார்ந்து வரையறை செய்ய இயலாது. நாவல்களில் இரு வகையுண்டு. ஒன்று குமுக நாவல் மற்றொன்று வரலாற்று நாவல். பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கும் ஒரு குமுகம் உணர்வு அடிப்படையில், வாழ்வு அடிப்படையில் பல இன்னல்களையும் சிக்கல்களையும் குமுக நாவல்கள் கதைமாந்தர்கள் வழி சிறிது கற்பனையை இணைத்துப் படைக்கின்றான் படைப்பாளி. காதல், வறுமை, பொருளியல் சிக்கல், சாதிச் சிக்கல், மதச் சிக்கல் முதலியவற்றைக் குமுக நாவல்கள் புலப்படுத்துகின்றன. குமுக நாவல்கள், எதார்த்த நாவல்கள் என்றும் போலி எதார்த்த நாவல்கள் என்றும் பகுக்கப்படுகின்றன. இக்குமுக நாவல்கள் மேலும் வட்டார நாவல்கள், குடும்ப நாவல்கள், குறுநாவல், பெருநாவல், புதுமை நாவல், உளத்தியல் நாவல், ஆன்மீக நாவல், துப்பறியும் நாவலென பிரிக்கப்பட்டுள்ளன. உள்ளடக்கம் தொடர்ந்து வளர்வதும், மாறிக்கொண்டிருப்பதும், பெரிய தத்துவத் தரிசனங்களை அலசும் நாவல்களும் உள்ளன. அன்றாட வாழ்க்கையை இயல்பாக ஆராயும் நாவல்களும் உள்ளன. ஒரு கிராமத்தின் கதை போல, இதிகாசப் பின்னணி கொண்ட நாவல்களும் உள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஓலைச்சுவடி காலத்தில் படைக்கப்பட்ட கவிதை இலக்கியங்களைக் கல்வி கற்றோர் மட்டுமே புரிந்து கொள்ளும் நிலை இருந்தது. சாதாரண மக்களும் பாமர மக்களும் இவற்றைப் புரிந்து கொள்ள இயலாத சூழல் மிகுந்திருந்தது. உரைநடையில் சாதாரண மக்கள் பேசும் நடையில் எழுதுவது சுலபமாக இருந்தமையால், படிப்போருக்கும் சுலபமாக விளங்கியது. இதன் பொருட்டே உரைநடை வடிவத்தில் கதை எழுதி நாவலை உருவாக்கினர் எழுத்தாளர்கள்.

### 1.9.2 மெய்ப்பாட்டியல்

தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் ஆறாவது இயலாக மெய்ப்பாட்டில் அமைந்துள்ளது. நாடகத்தில் பாடுவோரும், ஆடுவோரும் பாடலின் பொருள் வெளிப்படப் பாடி, ஆடிக் கேட்போரும், பார்ப்போரும் பாட்டின் பொருளை விளங்கிக் கொள்ளும்படி நடிக்கின்ற நடிப்பு மெய்ப்பாடு ஆகும். அகநிகழ்வை முகம் கண்ணாடி போல் காட்டும். வள்ளுவரும் 'நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்' (குறள்-706) என்றார். எனவே, மனக்குறிப்பிலிருந்து பொறியுணர்வால் பிறர்க்குப் புலனாகும் வண்ணம் மெய்யின் கண் வெளிப்படுவதே மெய்ப்பாடாகும். மெய்ப்பாடென்பது பொருள் வெளிப்பாடு. மெய்மயிர்ச் சிலிர்த்தலும் மெய் வியர்த்தலும், கண்ணிமைத்தலும், முகம் சுளித்தலும், உடல் நடுங்கலும் ஆகியவை மெய்யின்கண் வெளிப்பட்டுப் பிறர்க்குப் புலனாகும்படி தோன்றும் வெளிப்பாடுகளாகும். தொல்காப்பியர், மெய்ப்பாட்டுக்கூறுகளை, அவை தோன்றும் நிலைக்களன்கள், அகவாழ்வு புறவாழ்வு இரண்டிலும் மெய்ப்பாட்டின் பங்களிப்புப் போன்றவற்றைத் தெளிவுற விளக்கியுள்ளார். சுவைப்பொருள், அதனை நுகரும் பொறியுணர்வு, அது

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


உள்ளத்துப்பட்ட போது தோன்றும் குறிப்பு, அக்குறிப்பு உடலில் தோற்றமுறும் காட்சி என ஒவ்வொன்றையும் நான்கு நிலைக்களன்களாகக் குறிப்பிட்டுள்ளார்.

### 1.9.3 எண்வகை அல்லது முதன்மை மெய்ப்பாட்டியல்

இரு திணையான அகத்திற்கும் புறத்திற்கும் பொதுவான மெய்ப்பாடாக விளங்குவதே எண்வகை மெய்ப்பாடாகும். நாவெனும் பொறியினால் அறியப்பெறும் அறுவகைச் சுவைகளான இனிப்பு, கசப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்புப் போன்றே கண்கள், செவி ஆகிய உறுப்புகளின் வழி நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை போன்ற உணர்வுகள் அறியப்பெறுகின்றன என மெய்ப்பாடுகளை எண்வகையாகத் தொல்காப்பியர் பிரித்துள்ளார் (க.வெள்ளைவாரணன் 1986). ஒவ்வொரு மெய்ப்பாடு கூறுகளும் தனக்கென நான்கு நிலைக்களன்களைக் கொண்டுள்ளன. எள்ளல், இளமை, பேதமை, மடம் எனும் நிலைக்களன்கள் நகை எனும் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டின் கீழ் உள்ளன. அழுகை எனும் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டின் கீழ் நிலைக்களன்களாக இளிவு, இழவு, அசைவு, வறுமை ஆகியவை அடங்கியுள்ளன. அடுத்ததாக வரும் இளிவரல், மெய்ப்பாட்டியல் கோட்பாடு மூப்பு, பிணி, வருத்தம், மென்மை ஆகிய நிலைக்களன்களைக் கொண்டிருக்கின்றன. புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் ஆகிய நிலைக்களன்கள் மருட்கை எனும் மெய்ப்பாட்டியல் கோட்பாட்டின் கீழ் உள்ளன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொடர்ந்து, அச்சம் எனும் மெய்ப்பாட்டியல் கோட்பாடு அணங்கு, விலங்கு, கள்வர், இறை எனும் நிலைக்களன்களைக் கொண்டிருக்கின்றன. கல்வி, தறுக்கண், இசைமை, கொடை எனும் நிலைக்களன்கள் பெருமிதம் எனும் கோட்பாட்டின் கீழ் அமைந்துள்ளன. வெகுளி எனும் கோட்பாட்டின் கீழ் உறுப்பறை, குடிகோள், அலை, கொலை போன்ற நிலைக்களன்களைக் உள்ளடக்கியுள்ளன. இறுதியாக உவகை எனும் மெய்ப்பாட்டியல் கோட்பாடு செல்வம், புலன், புணர்வு, விளையாட்டு ஆகிய நிலைக்களன்களைக் கொண்டுள்ளன. ஆக, மெய்ப்பாடென்பது உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகள் உடம்பின்கண் தோன்றுதல் ஆகும் என்பது நிரூபணமாகின்றது. இதனையே பேராசிரியர் இளம்பூரணர், 'மெய்யின்கண் தோன்றுதலின் மெய்ப்பாடாயிற்று' என்றும் 'உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத்தார்க்குப் புலப்படுவதோர் ஆற்றான் புலப்படுதல்' என்றும் குறிப்பிடுகின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.4 துணைமை மெய்ப்பாட்டியல்

எந்தவொரு நிலைக்களனையும் சார்ந்திராது, தனியே தனித்து மெய்ப்பாட்டு உணர்வினை வெளிக்காட்டுவதே துணைமை மெய்ப்பாட்டியல் என பகர்கின்றார் தொல்காப்பியர். துணைமை மெய்ப்பாட்டியல் சுற்றுச்சூழலைச் சார்ந்து வெளிப்படுவதால் தனக்கென்று காரணிகள் கிடையாது. தொல்காப்பியர் 32 துணைமை மெய்ப்பாட்டியல்களை, எண்வகை மெய்ப்பாட்டியல் ஏற்றுவரும் செயல்களைப் போன்றே இவை மெய்ப்பாட்டியலை உடன் கொண்டு வருவதாக தொல்காப்பியம் தெளிவுபடுத்துகின்றது. உடைமை, இன்புறல், நடுவு நிலை, அருளல், தன்மை, அடக்கம், வரைதல், அன்பு, கைம்மிகல், நலிதல், சூழ்ச்சி,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வாழ்த்தல், நாணுதல், துஞ்சல், அரற்று, முனிதல், நினைத்தல், வெரூவுதல், மடிமை, கருதல், ஆராய்ச்சி, விரைவு, உயிர்ப்பு, கையாறு, இடுக்கண், பொச்சாப்பு, பொறாமை, வியர்த்தல், ஐயம், மிகை, நடுக்கு ஆகியவையே துணைமை மெய்ப்பாட்டியலாகும்.

## 1.10 தொகுப்புரை

சுஜாதா நாவல்களில் எண்வகை மெய்ப்பாட்டியல் எனும் இவ்வாய்வினில் ஆய்வாளர் ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வு சான்றாதாரங்கள், கலைச்சொற்களான மெய்ப்பாட்டியலையும், எண்வகை மெய்ப்பாட்டியலையும், துணைமை மெய்ப்பாட்டியலையும் நாவலைப் பற்றியும் விவரித்துள்ளார். மாந்தன் தன் உள்ளத்து உணர்வுகளை மிகச் சரியான முறையில் வெளிப்படுத்தக்கூடியவனாகவும், உணர்ச்சிகளைக் கையாளக் கூடியவனாகவும் இருக்க கற்றுக்கொள்ள வேண்டும். இதனால் தன்னையும் தன்னைச் சுற்றியுள்ளவர்களிடமும் நன்முறையில் நடந்துகொள்வதோடு மட்டுமின்றி, குமுகத்தில் நடக்கக்கூடிய பல்வேறு சிக்கல்களைச் சீர்மையாகக் கையாளவும் முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi